## NSW தடுப்புமருந்தளிப்பு கால அட்டவணை

தற்போதைய NSW தடுப்புமருந்தளிப்பு கால அட்டவணையைப் பார்க்க NSW சுகாதாரத்தின் பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்க:

www.health.nsw.gov.au/immunisation/schedule

## தடுப்பூசி போட வேண்டிய திகதிகளைக் குறித்து வையுங்கள் (Save the Date to Vaccinate)

குழந்தைகள் முன்கூட்டியே பாதுகாக்கப்படவும் பாரதுரமான நோய்களுக்கு அவர்கள் உட்படும் ஆபத்தைத் தவிர்க்கவும் தடுப்புமருந்துகள் **உரிய காலத்தில்** கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவது முக்கியமாகும். 'Save the Date to Vaccinate' என்ற கைத்தொலைபேசி மென்பொருள் உங்கள் குழந்தைக்கான தடுப்புமருந்துகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவலாம்.




உங்கள் குழந்தைக்குரிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புமருந்தளிப்பு கால அட்டவணை மற்றும் வீடியோ போன்ற பயனுள்ள தகவல்கள் மற்றும் வள ஆதாரங்களைப் பெற 'Save the Date to Vaccinate' – இன் பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்க:

www.immunisation.health.nsw.gov.au




## எனது உடல்நலப் பதிவேடு (Blue Book)

உங்கள் குழந்தைக்கான தடுப்புமருந்தளிப்புகள் மருத்துவர்/தாதியினால் பதிவு செய்யப்பட, ஒவ்வொரு சந்திப்பின்போதும் உங்கள் குழந்தையின் 'Blue Book' –இனை எடுத்து வருவது கட்டாயமாகும்.

## வயது வந்தோருக்கான தடுப்புமருந்தளிப்புப் பதிவுப் படிவம்

வயது வந்தோருக்கான தடுப்புமருந்தளிப்பு பதிவுப் படிவம் இங்கு கிடைக்கும்: www.health.nsw.gov.au/immunisation இது உங்கள் தடுப்புமருந்தளிப்புகளைக் கண்காணிக்க உதவும்.

## மேலதிக தகவல்

### NSW சுகாதார வலைத்தளம்

www.health.nsw.gov.au/immunisation

### ஆஸ்திரேலிய குழந்தைப் பருவ தடுப்புமருந்தளித்தல் பதிவு வலைத்தளம்

www.humanservices.gov.au/customer/services/medicare/australian-childhood-immunisation-register

### ஆஸ்திரேலிய அரசின் சுகாதாரத் திணைக்களத்தின் 'நோய்த் தடைக்காப்பு ஆஸ்திரேலியா' திட்டம்

www.immunise.health.gov.au

### மகப்பேற்றிற்கு முந்திய Pertussis தடுப்பு மருந்தளிப்புத் திட்டம் NSW

www.health.nsw.gov.au/protectnewborns

SHPN (CHP) 140121
March 2015 © NSW Ministry of Health.



# கருத்தரிப்பு

## கருத்தரிப்புக்கு முன்பிருந்து பிரசவம் வரையான பாதுகாப்பும் தடுப்புமருந்தளித்தலும்



NSW GOVERNMENT | Health

# நீங்கள் கர்ப்பிணியாகும் முன்பு

நீங்கள் கர்ப்பிணியாகும் முன்பு உங்கள் நோய் எதிர்ப்புத் தன்மை குழந்தைக்கும் கடத்தப்படும் என்பதால் நடப்புக் காலம் வரைக்கும் உங்களுக்கு அனைத்துத் தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். குழந்தைக்குரிய தடுப்பூசிகள் போடப்டுவதற்கு முந்திய சில வாரங்களுக்கு இதன் மூலம் அக்குழந்தைக்கு பாதுகாப்புக் கிடைக்கிறது. சில நோய்த் தொற்றுகள் உங்கள் கர்ப்பத்தைப் பாதிக்கக் கூடும், எனவே நீங்கள் கர்ப்பிணியாகும் முன்பு பாதுகாப்புப் பெற்றுக்கொள்வது சிறந்தாகும். நீங்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளீர்களா இல்லையா என்பதை ஒரு எளிய இரத்தப் பரிசோதனை காட்ட முடியும்.

## சின்னம்மை, அம்மைக்கட்டு மற்றும் ரூபெல்லா (MMR)

கர்ப்பக் காலத்தில் உங்களுக்கு சின்னம்மை, அம்மைக்கட்டு மற்றும் ரூபெல்லா ஏற்பட்டால் உங்களுக்கு கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம் அல்லது பாரதுரமான குறைபாடுகளைக் கொண்ட குழந்தைப் பிரசவம் ஏற்படலாம். நீங்கள் பாதுகாக்கப்படாதிருந்தால் உங்களுக்குத் தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டும். **தடுப்புமருந்தளிக்கப்பட்டு 28 நாட்கள் வரை நீங்கள் கர்ப்பிணியாகாதிருத்தல் முக்கியமாகும்.**



## வெரிஸெல்லா (சின்னம்மை)

கர்ப்பக் காலத்தில் உங்களுக்கு சின்னம்மை ஏற்பட்டால் அது பாரதுரமான குறைபாடுகளைக் கொண்ட குழந்தைப் பிரசவத்தை ஏற்படுத்தலாம். நீங்கள் பாதுகாக்கப்படாதிருந்தால் உங்களுக்குத் தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டும். **தடுப்புமருந்தளிக்கப்பட்டு 28 நாட்கள் வரை நீங்கள் கர்ப்பிணியாவதைத் தவிர்க்க வேண்டும்.**

# நீங்கள் கர்ப்பிணியாக இருக்கும் வேளையில்

## கல்லீரல் வீக்கம் (Hepatitis B)

பிரசவத்தின் போது குழந்தைக்கும் இந்த நோய் கடத்தப்படலாம் என்பதால் ‘ஹெபடைடிஸ் ‘பி’’ (Hepatitis B) தொற்று உள்ளதா என சகல கர்ப்பிணிப் பெண்களும் பரிசீலிக்கப்படுவர். உங்களுக்கு இந்நோய் இருந்தால் நீங்கள் ஒரு சிறப்பு மருத்துவரினால் பார்க்கப்பட வேண்டும். அத்துடன் உங்கள் குழந்தைக்கு “immunoglobulin” எனப்படும் மருந்தினால் சிகிச்சையளிக்கப்பட வேண்டும், மேலும் பிரசவத்தை அடுத்து உடனடியாக Hepatitis B தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டும். இச்சிகிச்சையளிக்கப்படாவிட்டால் உங்கள் குழந்தைக்கு நீடித்த Hepatitis B தொற்று ஏற்படக் கூடும். இது ஈரல் சிதைவு அல்லது ஈரல் புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களுக்கு இட்டுச் செல்லக்கூடும்.

## கக்குவான் இருமல் (pertussis)

கக்குவான் இருமலுக்கெதிரான தடுப்புமருந்தளிப்பதற்கான சிறந்த தருணம் ஒவ்வொரு கர்ப்பக் காலத்தின் மூன்றாம் மும்மாத காலமாகும் (28–ஆவது வாரம் ஏற்ற தருணமாகும்). நோயெதிர்ப்புப் பொருட்கள் கருப்பையிலுள்ள உங்கள் குழந்தைக்குக் கடத்தப்படுவதால் இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் முன்கூட்டியே பாதுகாப்பை அளிக்கும். கருத்தரித்திருக்கும் வேளையில் கக்குவான் இருமலுக்கெதிரான தடுப்புமருந்தளிப்பது தாய்க்கும் குழந்தைக்கும் பாதுகாப்பானதே.

உங்கள் துணைவர், உங்கள் குழந்தையின் பாட்டன் பாட்டி மற்றும் நெருங்கிய வயதுவந்த பராமரிப்பாளர்கள் ஆகியோர் கடந்த 10 வருடத்தில் கக்குவான் இருமலுக்கெதிரான தடுப்புமருந்தைப் பெறாதிருந்தால் குழந்தை பிறப்பதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பாவது அதனைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களைக் கேட்கவும்.

## சளிச்சுரம் Flu (influenza)

கர்ப்பக் காலத்தில் சளிச்சுரம் ஏற்படுவதானது குறைப்பிரசவம் மற்றும் குறைந்த எடையுடனான குழந்தைப்பிறப்பு ஆகிய பாரதுரமானதாக விளைவுகளை ஏற்படுத்தலாம். கர்ப்பக் காலத்தில் சளிச்சுரத் தடுப்பு மருந்து பாதுகாப்பானதும் பயனளிக்கக்கூடியதுமாகும், மேலும் இது சகல கர்ப்பிணிப் பெண்களுக்கும் மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு சளிச்சுர தடுப்பு மருந்து இலவசமாகும், மேலும் அது உங்கள் குழந்தைக்கு கருப்பையிலும், பிறந்த பின்பு 6 மாதங்கள் வரையிலும் பாதுகாப்பை அளிக்கிறது.

# உங்கள் குழந்தை பிறந்ததன் பிறகு

குழந்தைக்கு நீங்கள் தாய்ப்பாலூட்டிக் கொண்டிருந்தாலும், பிரசவத்தை அடுத்து உடனடியாக வழமையான தடுப்புமருந்துகளை நீங்கள் பெறுவது பாதுகாப்பானதாகும். கர்ப்பக் காலத்தின் மூன்றாம் மும்மாதத்தில் கக்குவான் இருமல் தடுப்புமருந்தை நீங்கள் பெறாதிருந்தால் மருத்துவமனையிலிருந்து நீங்கள் செல்வதற்கு முன்பதாக அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குழந்தை பிரசவித்தையடுத்து உங்கள் குழந்தைக்குரிய முதல் தடுப்புமருந்தாகிய Hepatitis B உடனே போடப்பட வேண்டும் என்று விதந்துரைக்கப்படுகிறது. அடுத்து போடப்பட வேண்டிய தடுப்புமருந்துகள் உங்கள் குழந்தைக்கு 6 – 8 வாரங்கள் ஆகும்போது கொடுக்கப்பட வேண்டும்.

Hepatitis B தொற்றுள்ள தாய்மாருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு, Hepatitis B தடுப்புமருந்தளித்தல்கள் பூரணப்படுத்தப்பட்ட 3 மாதங்களுக்குப் பிறகு அக்குழந்தைகள் பாதுகாப்பு பெற்றுள்ளனாரா என்பதை உறுதிப்படுத்த ஓர் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். உங்களுக்கும் உங்கள் மருத்துவருக்கும் ‘NSW சுகாதார’ த்திலிருந்து இது பற்றிய நினைவூட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்படலாம்.

**உங்கள் நோயெதிர்ப்புத் தன்மை உங்கள் குழந்தைக்கும் கடத்தப்படுவதால் நடப்புக் காலம் வரைக்குமான தடுப்புமருந்துகள் அனைத்தையும் நீங்கள் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியம்.**